Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஐப்பசி -25 11-11-2003 செவ்வாய்க்கிழமை ஓசை 266

S.M கோல்ட் ஹவுஸ்

காலத்தால் அழியாத
கண்கவர் தங்க
நகைகளை சுத்தமான
22 கரட் தங்கத்தில்
தெரிவு செய்து
பெற்றுக்கொள்ள



S.M கோல்ட் ஹவுஸ்

இல:-46A, தர்மலிங்கம் வீதி,
வவுனியா.
T.P: 024-222 4247
செல் 077-6059672

# பாராளுமன்றை உடன் கூட்டுமாறு சனாதிபதியிடம்

# எழுத்து மூலம் கோர கட்சித் தலைவர்கள் முடிவு

## ஜே.வி.பி. பொ.ஐ.மு. கூட்டத்தில் பங்கேற்கவில்லை

**பாராளுமன்றத்தை உடன் கூட்டுமாறு எழுத்து மூலம் சனாதிபதியிடம் கோரக் கட்சித் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர். நேற்றுக் கூடிய கட்சித் தலைவர்களின் கூட்டத்திலேயே இம்முடிவு எடுக்கப் பட்டது. இக்கூட்டத்தில் பொதுசன ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பி.யும் கலந்துகொள்ளவில்லை.**

ஐ.தே.க.தமிழர் விடுதலைக் கூட்டணி அ.இ.த.கா., புளொட், இ.தொ.கா. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சித் தலைவர்கள் அனைவரும் சேர்ந்து வரும் வியாழனுக்கு முன்பு மீண்டும் பாராளுமன்றைக் கூடடுமாறு சனாதிபதியிடம் கோரவுள்ளனர். இது தொடர்பாக கடிதம் மூலம் கோரிக்கை முன்வைக்க வருமாறு சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா அழைப்பு விடுத்துள்ளார்.

இதுதொடர்பாகக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் சபாநாயகரிடம் "உங்களுக்கு பாராளுமன்றைக் கூட்டுவதற்கு அதிகாரம் கிடையாதா? எனக் கேட்கப்பட்டபோது அவர் சனாதிபதி இடைநிறுத்தியுள்ள போது அரசியலமைப்பின்படி தமக்கு அதிகாரம் கிடையாது எனப் பதிலளித்துள்ளார். அத்துடன் பாராளுமன்ற விவகாரங்களில் தலையிட தமக்கு மக்கள் அதிகாரம்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் கருத்தை அறிந்த பின்பே பேச்சுக்கள் குறித்து முடிவு

## சிறில.பிரதமர் அலுவலகம் அறிவிப்பு

விடுதலைப்புலிகளுடன் நோர்வே தரப்பினூடாகப் பேசிய பின்பே சமாதான முன்னெடுப்புகள் குறித்து முடிவுகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக சிறிலங்கா பிரதமரின் அலுவலகம் நேற்றுத் தெரிவித்தது. சமாதானப் பேச்சு வார்த்தைகள் ஒத்திவைக்கப்பட்டதாக முன்னர் வந்த செய்திகளையும் பிரதமரின் அலுவலகம் மறுத்துள்ளது.

சிறிலங்கா அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையிலான சமாதானப் பேச்சுவார்த்தை காலவரையறையின்றி ஒத்தி போடப்பட்டுள்ளதாக சிறிலங்கா அமைச்சர் பீரிஸ் தெரிவித்ததாக செய்திகள் வெளிவந்திருந்தன.

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தேசிய அரசு அமைக்கும் சந்திரிகாவின் கோரிக்கை ரணிலால் நிராகரிப்பு

(கொழும்பு)

அனைத்துக் கட்சிகளையும் இணைத்து தேசிய கூட்டணி அரசாங்கம் ஒன்றை அமைக்கவருமாறு சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த அழைப்பை நிராகரித்த சிறிலங்கா பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேர்தல் ஒன்றுக்குத் தான் தயாராகிவிட்டதாகக் கூறியுள்ளார்.

நேற்றுசிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க பிரதமர்ரணில் விக்கிரமசிங்கவுக்கு எழுதிய கடிதம் ஒன்றில் தற்போதைய அரசியல் சூழ்நிலை பற்றிபேச்சுக்கள் நடத்துவதற்கும் தேசிய நல்லிணக்க கூட்டணி அமைப்பது தொடர்பாக கலந்துரையாடவும் வருமாறு அழைப்பு விடுத்திருந்தார். அவர் தனது கடிதத் தில் இரு தலைவர்களும் பேச்சு நடத்துவதற்காக இந்த வாரத்தை தெரிவுசெய்து அறிவித்திருந்தார். அத்துடன் பேச்சுக்களில் கலந்து கொள்ள பிரதமரும் அவரின் சிரேஷ்ட பிரதிநிதியையும் அழைத்துவருமாறு தெரிவித்தார். மேலும் கருஜயசூரிய, மாலிக் சமரவிக்ரம ஆகியோரின் கூட்டணி பற்றிய ஆலோசனைகளை அறியுமுகமாக அவர்களுக்கும் அழைப்பு விடுத்தார். அதன்படிபின்வரும் நாட்கள் ஒன்றில் பேச்சு நடத்தகேட்கப்பட்டுள்ளது. இன்று காலை 11 மணி முதல் 3மணிவரையும், புதன்கிழமை

(8 ஆம் பக்கம் பார்க்க)

# கண்காணிப்புக்குழு, ரணிலை நோர்வேக்குழு இன்று சந்திக்கும்

## - வியாழன் வன்னிக்கு வருகை தரும்

நோர்வே சமாதான ஏற்பாட்டாளரான பிரதிவெளிவிவகார அமைச்சர் விதாத் ஹெலஸ்கேசன் மற்றும் சமாதானத் தூதுவர் எரிக்சூல் ஹெய்ம் ஆகியோர் இன்று போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரையும், அதன் பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவையும் அவர்கள் சந்திக்கின்றனர். சனாதிபதியுடனான சந்திப்புகள் நாளை நடைபெறும் என தெரியவருகிறது.

இதேவேளை வியாழக்கிழமை அவர்கள் இருவரும் கிளிநொச்சிக்கு செல்கின்றனர். இவர்கள் இருவரும் 13ஆம் திகதிவரை இலங்கையில் தங்கியிருப்பர் என நோர்வேத் தூதரக வட்டாரங்கள் தெரிவிக் கின்றன. நேற்றிரவு 10 மணியளவில் அவர்கள் இலங்கை வருகைதரவிருந்தனர்.. (32)

# இலங்கை நிகழ்வுகள் இந்தியாவிற்கு மிகவும் கவலையளிக்கிறது

## இந்திய வெளியுறவு அமைச்சு செயலாளர்

இலங்கை நிகழ்வுகள் இந்தியாவுக்கு மிகவும் கவலையளிக்கிறது என்று இந்திய வெளியுறவு அமைச்சின் செயலாளர் கன்வல் சிபால் தெரிவித்துள்ளார்.

செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் தெரிவிக்கையில், அரசியல் நிலைமைகள் மேலும் மேலும் குழப்பமடைந்து வருகிறது. இதற்குத் தீர்வு காணாமல் சர்ச்சைக்குரிய அறிக்கைகளை அரசாங்கமும், சனாதிபதியும் வெளியிடுவது அமைதிப் பேச்சுவார்த்தைகளை மேலும் தாமதப்படுத்தும் அல்லது பலவீனப்படுத்தும் என்கின்ற கவலை இந்தியாவுக்கு இருக்கிறது.

அமைதிப் பேச்சுவார்த்தை எந்தக் காரணம் கொண்டும் தடைப்படக் கூடாது. மேலும் முன்னெடுத்துச் செல்லப்படவேண்டும் என்கின்ற கவலை காரணமாக மீண்டும்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் ஒன்றுக்கு முகம்கொடுக்க எந்த வேளையிலும் தயாராக உள்ளோம்

## - அமைச்சர் ஜீ. எல். பீரிஸ்

நாம் எந்த வேளையிலும் தேர்தலொன்றிற்கு முகம் கொடுக்க தயாராகவுள்ளோம். எந்தவொரு சமயத்தை போல இதுவும் நல்ல சமயமே என்று அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மையான பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதமருக்கு தமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

நடைபெறும் சமாதான முயற்சிகளை சனாதிபதியே பொறுப்பேற்க வேண்டும் என்ற கருத்தை அமைச்சரவையும் அங்கீகரித்து விட்டது.

சமாதான முயற்சிகளின் போது பாதுகாப்பு அமைச்சு உட்பட அதனுடன் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களின் முழுப் பொறுப்பும் தன்னிடம் இல்லாத நிலையில் விடுதலைப் புலிகளுடன் சமரச முயற்சிகளில் ஈடுபட முடியாது என்பது பிரதமரின் நிலைப்பாடாகும்.

சனாதிபதி இந்த சமாதான முயற்சிகளுக்கான பொறுப்பை ஏற்றால் விடுதலைப்புலிகள்,மற்றும் முக்கிய கொடையாளிகள் உட்பட இதனுடன் சம்பந்தப்பட்ட அனைவரும் அவர்களுடைய புதிய பங்களிப்பை அங்கீகரிக்க வேண்டும் என்றும் நேற்றும் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் கூறினார்.

# சமாதான முன்னகர்வை முழுமையாக சந்திரிகா பொறுப்பேற்க வேண்டும்

## - அமைச்சரவையில் நேற்றுத் தீர்மானம்

மூன்று அமைச்சுக்களையும் மீண்டும் ஒப்படைக்காவிடின் சமாதான முன்னகர்வின் முழுப்பொறுப்பையும் சனாதிபதி சந்திரிகா



குமாரதுங்க ஏற்க வேண்டும் என நேற்று சிறிலங்கா அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

நாட்டிலுள்ள அரசியல் நெருக்கடி காரணமாக இலங்கையின் பொருளாதாரம் ஆபத்தான நிலைக்கு உள்ளாகியிருப்பதாக அமைச்சரவை கவலை வெளியிட்டுள்ளது. அமைச்சரவை நேற்று பிரதமர் தலைமையில் கூடியது. இதன்போது சமாதான முன்நகர்வின் முழுப் பொறுப்பையும் சனாதிபதி ஏற்றுக் கொள்ளவேண்டும் என அமைச்சரவை ஏகமனதாகத் தீர்மானம் எடுத்தது. அதற்கு அரசாங்கக் குழு ஒத்துழைப்பையும் வழங்கும் . அவ்வாறு அரசாங்கம் சமாதான நடவடிக்கையை முன்னெடுக்க முடியாது போனால்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான முயற்சிகளை முன்னெடுக்க சனாதிபதி தயாராக உள்ளார்

## எதிர்க்கட்சித் தலைவர் மகிந்தராஜபக்ச

(கொழும்பு)

சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை ஏற்க சனாதிபதி தயாராகவே உள்ளார் என எதிர்க் கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். நேற்று கொழும்பில் நடந்த பொ.ஐ. முன்னணி தொழிற்சங்க அமைப்பின் தலைவர்கள் மாநாட்டில் அவர் உரையாற்றும்போது தற்போதைய சமாதான முயற்சிகளை சனாதிபதியே தொடங்கியதாகவும் அவற்றை முன்னெடுத்து செல்வது அவருக்கு சவாலாக இருக்காது எனவும் எதிர்க் கட்சித்தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

சமாதான முயற்சிகளை ஏற்பாடு செய்யும் தரப்பாக நோர்வே அரசாங்கத்தை இணைத்துக் கொள்ள சனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளதையும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். இத்தகைய ஆற்றல் களைக்கொண்ட ஒருதலைவிக்கு சமாதான முயற்சிகளை சரியான வழியில்நடத்துவது ஒரு பிரச்சினையாக இருக்க மாட்டாது எனவும் மகிந்தராஜபக்ச தெரிவித்துள்ளார். நேற்றைய கலந்துரையாடல்களில் தேசிய நல்லிணக்க அரசாங்கத்தை ஸ்தாபிக்கும் விதி முறைகளை எவ்வாறு வழிப்படுத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### சிறு விளம்பரம்

**Jeevasoft Systems** ஊடாக **PC-Assembling, PC- Upgrading, PC-Repair, Software Developing, Web Designing** ஆகியன செய்து கொடுக்கப்படும். மேலதிக தொடர்புகளுக்கு: திரு. கா.ஜீவலிங்கம், C.C. பாடசாலை அருகே புதுக்குடியிருப்பு. (3725)


## அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டம்

கிளிநொச்சி மாவட்ட அத்தியாவசிய சேவைகள் குழுக்கூட்டம் இன்று பகல் 10.00 மணிக்கு கிளி. அரச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி அத்தியாவசிய சேவைகள் குழுக் கூட்டத்திற்கு சகல அரச, அரசசார்பற்ற நிறுவன அதிகாரிகள்,தலைவர்களைத் தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கிளி அரசஅதிபர் தி.இராசநாயகம் வேண்டியுள்ளார். (சோ)

# ஐ.ரி.என்.பணிப்பாளர் சபையை அமைக்க நிதியமைச்சின் செயலாளர் மறுப்பு

## - ஜே.ஆர், ரணிலின் படங்கள் அகற்றல்

(கொழும்பு)

சுயாதீன தொலைக்காட்சி சேவையின் தலைவர் உட்பட பணிப்பாளர் சபையை நீக்கிவிட்டு புதிய பணிப்பாளர் சபையை அமைக்குமாறு ஊடகத்துறையமைச்சின் புதிய செயலர் நிதியமைச்சுச் செயளாலரிடம் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

ஊடகத்துறையில் புதிதாக செயலாளராக நியமனம் பெற்ற திலக் ரணவிராஜா நிதியமைச்சுச் செயலர் சரித்த ரத்வத்தையிடம் விடுத்த கோரிக்கையே நிராகரிக்கப்பட்டுள்ளது. மேற்படி சுயாதீன தொலைக்காட்சி சேவை நிதியமைச்சின் கட்டுப்பாட்டின் கீழுள்ள நிறுவனம் என்பது குறிப்பிடத்தக்கது. ஆகவே மேற்படி தொலைக் காட்சி நிறுவனத்திற்கு தலைவரும் பணிப்பாளர் சபையும்இல்லாமைநிர்வாகப் பிரச்சினையைத் தோற்றுவித்துள்ளது.இதற்கிடையில் அந்த நிறுவனத்தில் வைக்கப்பட்டிருந்த முன்னை நாள் சனாதிபதி ஜே. ஆரின் உருவப்படமும் அகற்றப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. அவர் அந்த நிறுவனத்தின் ஸ்தாபகர் என்ற வகையில் அவரது உருவப்படம் அங்கு வைக்கப்பட்டிருந்தது. மேலும் அங்கு வைக்கப்பட்டிருந்த ரணிலின் உருவப்படமும் அகற்றப்பட்டன.

இதனையடுத்து முன்னைநாள் நிறுவனப் பணிப்பாளர் தம்மிக கங்கானாத் திசாநாயக்க ஸ்தாபகரினதும் ரணிலினதும் படங்களை அகற்றியமைக்கு எதிராக தாம் நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்துள்ளார்.

# தேர்தல் செலவைக் குறைக்க சனாதிபதிக்கு ஆலோசனை

(கொழும்பு)

திடீரென நாட்டில் தேர்தல் ஒன்று நடைபெற வேண்டுமெனில் பாராளுமன்றத் தேர்தலையும் மாகாணசபைத் தேர்தலையும் ஒரே நேரத்தில் நடத்தினால் ஏற்படும் செலவுகளை மிகவும் குறைக்க முடியும் எனத் தேர்தல் ஆணையாளர் சனாதிபதிக்கு ஆலோசனை கூறியுள்ளார். பொதுத் தேர்தல் ஒன்று நடந்தால் அதற்கு ரூபா65 கோடி செலவாகும். ஆனபடியால் இரண்டு தேர்தல்களையும் ஒரே சமயத்தில் நடத்தினால் செலவுகள் மிகக் குறையும் எனத் தேர்தல் ஆணையாளர் அறிவித்துள்ளார்.





[ சி-8698 ]

## 10ஆம் ஆண்டு நினைவில்



பூநகரி- நாகதேவன்துறை கூட்டுத்தள தகர்ப்பின்போது....

### லெப்.கேணல் அன்பு

### (பொன்னம்பலம் சரவணபவான்)



தாயின் மடியில் 25-09-1966

தாயக மண்ணில் 12-11-1993

கர்ம வீரனே!

கதைக்கும் கவிதைக்கும் புதுமை காட்டிட<br>
தமிழுக்கு நாம் அலைகின்றோம்.<br>
மலைக்கும் நிலைக்கும் நிகரான சமரொன்றில்<br>
கலக்கம் எதிரியோடு எமக்கும் தந்தாய்.<br>
நிலைக்கும் உன் வரலாறு - நீ<br>
வளர்த்த வழியில் விழிப்புடன் நடப்போம்.<br>
கடக்கும் பாதையில் வெடிக்கும் புதுமைகள்<br>
துடிப்புடன் சமைப்போம்.- நித்தம்<br>
நெஞ்சில் உன் நினைவுகள் ஏந்தி<br>
தொடரும் எம் விடுதலைப்பயணம்.



பணிப்பாளர்கள்<br>
பணியாளர்கள்..<br>
கரைதுறைப்பற்று<br>
ப.நோ.கூ.சங்கம்(வ/து)<br>
முல்லைத்தீவு.

[ சி-8699 ]

# லெபனான் ஹிஸ்புல்லா இயக்கத்துடன் கைதிகள் பரிமாற்றத்துக்கு ஏற்பாடு!

## *இஸ்ரேலிய அமைச்சரவை ஒப்புதல்*

(ரெல் அவிவ்)

**இஸ்ரேலுக்கும் லெபனான் நாட்டிலிருந்து செயற்படும் ஷியா பிரிவினைச் சேர்ந்த ஹிஸ்புல்லா இயக்கத்திற்கும் இடையே பரஸ்பரம் கைதிகள் விடுவிப்பிற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.**

பிடித்து வைத்திருக்கும் கைதிகளை இரு தரப்பும் விடுவித்துக் கொள்ளும் ஒப்பந்தமொன்றிற்கு இஸ்ரேல் அமைச்சரவை முதல முதலாக ஒப்புதல் அளித்துள்ளது.

சாதாரண பெரும்பான்மையுடனேயே இந்த அமைச்சரவை ஒப்புதல் அளிப்பதாக இஸ்ரேல் கூறியுள்ளது.

இஸ்ரேலிய அமைச்சரவையில் 12 அமைச்சர்கள் ஒப்பந்தம் செய்வதற்கு ஆதரவையும் 11 அமைச்சர்கள் எதிர்ப்பையும் தெரிவித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதற்கமைய இஸ்ரேல் தனது சிறையில் இருக்கும் 400 பலஸ்தீனக் கைதிகளையும் 20 லெபனான் கைதிகளையும் விடுவிக்கவுள்ளது.

2000ஆம் ஆண்டு எல்லைச் சண்டையின் போது கடத்தப்பட்ட இஸ்ரேல் தொழிலதிபரை லெபனான் ஹிஸ்புல்லா இயக்கம் விடுதலை செய்யவுள்ளது. அத்துடன் 03 இஸ்ரேலியப் படைவீரர்களின் உடல்களையும் ஒப்படைக்கவுள்ளது.



தொழிற்சங்க வாதிகளின் சம்பளத்தை அபகரித்ததற்காகவும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டோருக்கு மீண்டும் வேலை வழங்கக் கோரியும் தென் கொரிய சியோல் நகரில் ஆர்ப்பாட்டம் செய்யும் ஊழியர்கள்.

# சட்டவிரோத குடியேறிகளை அவுஸ்திரேலியா ஏற்க மறுப்பு!

சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குள் பிரவேசிக்க முயன்றவர்கள் பயணம் செய்த கப்பலை அந்த நாட்டினுள் பிரவேசிக்க அனுமதிக்க முடியாது என அவுஸ்திரேலியக் குடிவரவுத் திணைக்களம் அறிவித்தமையைத் தொடர்ந்து சட்டவிரோதமாகப் பிரவேசிக்க முயன்றவர்களை அவுஸ்ரேலியக் கப்பல்ப் படையினர் அந்தக் கப்பலுடன் இந்னேசியாவுக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இவர்களின் எதிர்காலம் பற்றி இந்னேசியாவில் முடிவு செய்யப்படும் என அவுஸ்திரேலிய குடிவரவுத் திணைக்கள அமைச்சர் கூறியுள்ளார்.



தெற்கு ஜேர்மனி மியூனிச் நகரில் புதிய யூத மத்திய நிலையத்திற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொள்ளும் மதத் தலைவர்களும், அரசியல் வாதிகளும்.

# ஜப்பானில் ஆளும் கூட்டணி தேர்தலில் குறைந்தளவு பெரும்பான்மையுடன் வெற்றி

## -பிரதமரின் சீர்திருத்த நடவடிக்கைகளில் சிக்கல்

(டோக்கியோ)

ஜப்பானின் ஆளும் கூட்டணி பொதுத் தேர்தலில் தனது பெரும்பான்மையை தக்க வைத்துள்ளது.

ஆளும் கூட்டணி மிகவும் குறைந்த வித்தியாசத்தில் பெரும்பான்மை வெற்றியைப் பெற்றுள்ளது. 480 உறுப்பினர் ஜப்பானிய நாடாளுமன்றத்தின் கீழ் அவையில் ஆளும் கூட்டணி 275 இடங்களில் வெற்றி பெற்றுள்ளது.

இந்த அவையில் முன்பு ஆளும் கூட்டணி 282 இடங்களைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் பிரதமர் கொய்சுமியின் சனநாயகக் கட்சி தான் பெற்றிருந்த சாதாரணப் பெரும்பான்மையை இழந்து விட்டது. கடந்த முறை 247 இடங்களில் வெற்றி பெற்ற அந்தக் கட்சி இம்முறை 237 இடங்களை மட்டுமே கைப்பற்றியுள்ளன.

எதிர்க்கட்சிகள் அதிக இடங்களைப் பெற்றிருப்பதால் பிரதமர் சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல்களை எதிர்நோக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.



ஜப்பானியப் பிரதமர் கொய்சுமி

## *6–வது தடவையாக கையூம் பதவியேற்பு*

ஆறாவது முறையாகத் தொடர்ந்து மாலைதீவு சனாதிபதியாக மௌமூன் அப்துல் கையூம் பொறுப்பேற்கவுள்ளார்.

இந்த நிகழ்வில் பங்கேற்க இந்தியத் துணைப் பிரதமர் அத்வானி 03 நாள் பயணமாக மாலைதீவுக்குச் செல்லவுள்ளார். இவருடன் பிரதிநிதிகள் குழுவும் செல்லவுள்ளது.

# சீனாவுடன் கூட்டுப் பயிற்சி இந்தியக் கடற்படை ஏற்பாடு

(புதுடில்லி)

இந்திய- சீன கூட்டுக் கடற்பயிற்சியில் ஈடுபடுவதற்காக இந்தியாவின் இரண்டு கடற்படைக் கப்பல்கள் நேற்று சீனாவின் மேற்கு கடற்பகுதிக்கு புறப்பட்டன.

இருநாட்டு உறவுகளில் குறிப்பாக அதிலும் இராணுவ உறவுகளில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதே இந்தக் கடற்பயிற்சியின் நோக்கமாகும். தேடுதல் மற்றும் மீட்புப் பணிகள் போன்றவற்றிலேயே இந்தப் பயிற்சிகள் அமைகின்றன

# பத்திரிகை ஆசிரியர்கள் கைதைக் கண்டித்து பத்திரிகையாளர் அடையாள உண்ணாவிரதம்

இந்து மற்றும் முரசொலி ஆசிரியர்களுக்கு பதினைந்து நாள் சிறைத்தண்டனை விதித்ததைக் கண்டித்து நேற்றுமுன் தினம் சென்னையில் பத்திரிகையாளர்கள் கொட்டும் மழையில் உண்ணாவிரதம் இருந்தனர். இந்து, முரசொலி ஆசிரியர் உட்பட 6 பேருக்கு 15 நாள் சிறைத் தண்டனை விதித்ததை அடுத்து சனிக்கிழமை இந்தியா முழுவதும் பத்திரிகையாளர்கள் கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதைத் தொடர்ந்து சென்னையில் நேற்றுமுன்தினம் பத்திரிகையாளர்கள் உண்ணாவிரதம் இருந்தனர். சென்னை பத்திரிகையாளர் மன்றத்திற்கு முன்பு காலை 9.00 மணிக்கு உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்கினர். இந்த உண்ணாவிரதத்தில் சென்னை பத்திரிகையாளர் மன்றம், சென்னை நிருபர்கள் சங்கம், சென்னை பத்திரிகையாளர்கள் சங்கம், பத்திரிகையாளர் பாதுகாப்புப் போராட்டக்குழு, தமிழ்நாடு பத்திரிகையாளர் சங்கம் மற்றும் பெண்பத்திரிகையாளர் சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

200க்கும் மேற்பட்டவர்கள் உண்ணாவிரதத்தில் பங்கேற்றனர். அனைத்துப் பத்திரிகையாளர்களும் கறுப்புப்பட்டி அணிந்திருந்தனர். உண்ணாவிரதிகள் தமிழக அரசை எதிர்த்து கோஷம் எழுப்பினர். தமிழக அரசே, தமிழக அரசே பத்திரிகைச் சுதந்திரத்தைப் பறிக்காதே. உண்மை எழுதிய இந்து, முரசொலி ஆசிரியர் உட்பட மற்றவர்களுக்கும் சிறைத்தண்டனை விதித்ததை ரத்துசெய் உட்பட பல கோஷங்களை எழுப்பினர். உண்ணாவிரதம் நடந்த இடத்தில் பலத்த பொலிஸ்பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

## பேருந்து விபத்து 34 பேர் பலி

ஈரானில் நேற்று முன்தினம் பேருந்து விபத்தொன்றில் 34 பேர் உயிரிழந்துள்ளார்கள். 10 பேர் காயமடைந்துள்ளார்கள். மத்திய ஈரானிலேயே இந்த விபத்து ஏற்பட்டுள்ளது. பயணிகள் பேருந்தும், றக் ஒன்றும் மோதிக் கொண்டமையினாலேயே இந்த விபத்து ஏற்பட்டது. உலகில் அதிகமான வீதிவிபத்துக்கள் ஏற்படும் நாடுகளில் ஈரானும் ஒன்று என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழக அரசைக் கலைக்க மத்திய அரசு ஆராய்வு!

(புதுடில்லி)

முதலமைச்சர் ஜெயலலிதா தலைமையிலான தமிழக அரசை 356 ஆவது சட்டத்தைப் பயன்படுத்திக் கலைத்து விடுவது குறித்து மத்திய அரசு ஆராய்ந்து வருகிறது.

தமிழ்நாடு சட்டப் பேரவை இந்து, முரசொலி ஆகிய பத்திரிகைகளின் மூத்த பத்திரிகையாளர்களைக் கைது செய்த நடவடிக்கைக்குப் பாரதீய ஜனதாக் கட்சியும் கண்டனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை, தி.மு.க. தலைவர் [illegible] முக்கிய அமைச்சர்கள் மத்தியரசிற்குத் தமிழக அரசின் நடவடிக்கைகள் குறித்து முறைப்பாடு செய்யவுள்ளனர்.

அத்துடன் தமிழக அரசைக் கலைத்துவிட்டு, குடியரசுத் தலைவர் ஆட்சியை ஏற்படுத்தும்படியும் தமிழகக் காங்கிரஸ் செயல் தலைவர் இளங்கோவன் வலியுறுத்தியுள்ளார்.

எதிர்வரும் 12 ஆம் திகதி தி.மு.க. காங்கிரஸ் உட்பட எதிர்க்கட்சிகள் இணைந்து மனித சங்கிலிப் போராட்டத்தை [illegible]

# பயங்கரவாதத்திற்கு எதிரான சவுதியின் முயற்சிகளுக்கு ஆதரவு

## சனாதிபதி ஜோர்ஜ்புஷ்

தீவிரவாதத்திற்கும் பயங்கரவாதத்திற்கும் எதிரான சவுதி அரேபியாவின் அனைத்து முயற்சிகளுக்கும் அமெரிக்கா தனது முழுமையான பங்களிப்பை அளிக்கும் என அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் புஷ் கூறியுள்ளார்.


சவுதி அரேபியத் தாக்குதல் தீவிரவாதிகளின் இலக்கற்ற தாக்குதல் என்பதுடன் இது ஒரு முறையற்ற தாக்குதல் எனவும் சவுதி அரேபியாவின் பிரிட்டன் தூதுவர் கூறியுள்ளார்.



ஜெர்மனியிலிருந்து பிரான்சுக்கு அணுசக்தி கழிவுகளைக் கொண்டு செல்வதை தடுக்கப்போவதாக ஆயிரக்கணக்கான ஜெர்மனியர்கள் ஆர்ப்பாட்டம் செய்வதை அறிந்த பொலிசார் நாய்களுடன் [illegible]

# அந்நிய மண்ணில் வெற்றிபெற அரிய சந்தர்ப்பம்

2004 ஆம் ஆண்டு அவுஸ்திரேலிய சுற்றுப் பயணத்தை மேற்கொள்ளவுள்ள இந்திய அணிக்கு எதிரான போட்டியில் அவுஸ்திரேலியாவின் முன்னணி பந்து வீச்சாளர்கள் இடம்பெறுவார்களா என்பதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.



இது இந்திய வீரர்களைப் பொறுத்தவரையில் மகிழ்ச்சியான ஒன்றாக அமைந்திருக்கும். ஏனெனில் இந்திய துடுப்பாட்ட வீரர்கள் துணிச்சலுடன் ஆடுவதற்கு இது ஒரு வாய்ப்பாகும்.

ஆயினும் அவுஸ்திரேலிய துடுப்பாட்ட வீரர்கள் தொல்லையாக அமைவார்கள் என எதிர்பார்க்கும் இந்தியா தமது சுழற்பந்து வீச்சாளர்கள் மூலம் அவர்களை வீழ்த்தி அரிய அந்நிய வெற்றி ஒன்றை ஈட்டலாம் என நினைத்திருக்கக் கூடும்.

கிரிக்கெட்டில் எந்த ஒரு அணியாக இருந்தாலும் சரி முக்கிய வீரர்கள் இடம்பெறாது போனால் அதனால் ஏற்படும் இழப்பு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகவே இருக்கும். அதிலும் தங்களது அணியின் வெற்றியைத் தீர்மானிக்கும் வீரர்கள் என்றால் ஜீரணிக்க முடியாத தொன்று.

இந்நிலையில் சொந்த மண்ணில் மட்டுமல்ல அந்நிய மண்ணிலும் அவுஸ்திரேலிய அணி அபாரமாக வெற்றிகளைக் குவிப்பதற்கு அந்த அணியில் உள்ள ஒவ்வொரு வீரரின் கடுமையான உழைப்பு முக்கிய பங்கு வகிக்கின்றது. இதில் பந்து வீச்சாளர்களான மெக்ராத், பிரட்லீ, கிலெஸ்பீ ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

தற்போது இவர்கள் மூன்று மாத ஓய்வில் உள்ள நிலையில் புதுமுகப் பந்து வீச்சாளர்களுடன் இந்திய சுற்றுலாவை மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி தான் சந்தித்த முதல் ஒருநாள் போட்டியில் இந்திய அணியுடனான போட்டியில் தோல்வி அடைந்து தனது பலவீனத்தை வெளிப்படுத்திய போதும் அடுத்தடுத்த போட்டிகளில் அபார வெற்றிபெற்று முத்தரப்புத் தொடரில் முன்னணி வகிக்கின்றது. இதுதற்போதைய அவுஸ்திரேலிய அணியில் உள்ள ஒவ்வொரு வீரரும் தனித்தன்மை வாய்ந்த வீரர்களாக வலம் வருகின்றனர் என்பதை கிரிக்கெட் உலகிற்கு நிருபித்துக் காட்டுகிறன்றனர்.

அத்துடன் தற்போது அணியில் இடம் பெற்றுள்ள பந்துவீச்சாளர்கள்



தமது அணியின் முன்னணிப் பந்து வீச்சாளர்களுக்கு நிகரானவர்கள் என்பதை நிருபித்துக் காட்டுகின்றனர்.

அந்நிய மண்ணில் அபாரமாக பந்துவீசும் இவர்கள் தமது சொந்த மண்ணில் இந்திய அணிக்கு சிம்மசொப்பனமாகத் திகழ்வார்கள் என்பதில் எதுவித ஐயமும் இல்லை.



ஜெயந்திரன்

## விலைபோகும் வீரர்

பிறேசிலின் நட்சத்திரக் கால்பந்தாட்ட வீரர் றொனால்டோவை இன்டர்மிலான் கழகத்தில்-இருந்து தமது கழகத்தில் சேர்த்தமைக்காக இன்டர்மிலான் கழகத்திற்கு ரியல் மட்றிட் கழகம் மேலும் ஒரு கோடி யூரோ (சுமார்114 கோடி ரூபா) பணம் வழங்க வேண்டும் என்று சர்வதேசக் கால்பந்தாட்ட சம்மேளனம் (பீ்.பா) அறிவித்துள்ளது.



றொனால்டோவின் இடமாற்றம் தொடர்பான கடப்பாடுகளைப் பூரணமாக நிறைவேற்றத் தவறியமையே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாலியின் இன்டர் மிலான் கழகத்திற்காக விளையாடிய றொனால்டோ கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் ஸ்பெயினின் ரியல்மட்றிட் கழகத்திற்கு மாறினார். இதற்காக 4.5 கோடி டொலர் (சுமார் 450 கோடி ரூபா) ஒப்பந்தம் ஒன்றை இரு கழகங்களும் மேற்கொண்டன.

இந்த ஒப்பந்தத்தின்படி ரியல் மட்றிட் கழகத்தின் சன்டியாகோ சோலாறி இன்டர் மிலான் கழகத்தில் இணைந்து கொள்ள வேண்டும். ஆனால் இன்டர் மிலான் கழகத்தில் இணைவதற்கு ஆர் ஜன் ரீனா வீரரான சோலாறி மறுத்து விட்டார்.

இவ் விவகாரம் தொடர்பாக இன்டர் மிலான் சர்வதேசக் கால்பந்தாட்ட சம்மேளனமான பீ்.பாவிடம் முறையிட்டது. இது குறித்து விசாரணை நடத்தியபீ்.பா இன்டர் மிலான் கழகத்திற்கு பத்து மில்லியன் யூரோவை வழங்குமாறு உத்தரவிட்டுள்ளது.

இத் தொகையின் முதல் தவணைப் பணம் 30 நாட்களுக்குள் வழங்கப்பட வேண்டுமெனவும் உத்தரவிட்டுள்ளது.

## மண்டேலாவின் ஆசை



2010 ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை நடத்தும் உரிமை தென்னாபிரிக்காவுக்கு வழங்கப்பட வேண்டும் என்று அந்நாட்டின் முன்னாள் சனாதிபதி நெல்சன் மண்டேலா கோரிக்கை விடுத்துள்ளார்.

நிறவெறி ஆட்சியில் இருந்து தென்னாபிரிக்கா சனநாயக வழிக்கு அமைதியாகத் திரும்பியமைக்கு வெகுமதியாக தமது நாட்டுக்கு இந்த வாய்ப்பை வழங்குமாறு மண்டேலா கேட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை நடத்தும் உரிமை ஆபிரிக்க நாடொன்றுக்கு வழங்கப்படும் என சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனம் உறுதியளித்துள்ள நிலையில் மண்டேலா இக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

மேற்படி விண்ணப்பத்திற்கு இணங்க சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத்தின் பரிசோதகர் குழுவொன்று தென்னாபிரிக்கா சென்றது. அப்போது 18 வருடம் சிறைவைக்கப்பட்டிருந்த ரோபன்தீவு நிறவெறி சிறைச்சாலைக்கு அவர்களை அழைத்துச் சென்ற மண்டேலா பத்து வருடங்களுக்கு முன் வெள்ளையர் ஆட்சி நீக்கப்பட்டபோது தென்னாபிரிக்காவில் பெரும் எண்ணிக்கையிலான மனிதப் படுகொலைகள் நடைபெறும் என முழு உலகமும் ஊகம் தெரிவித்தது. ஆனால் வன்முறையை தவிர்த்ததன் மூலம் உலகை நாம் வியப்புக்குள்ளாக்கினோம். இதற்காக எமக்கு வெகுமதி அளிக்கப்பட வேண்டும். அதனால் இதற்கான ஒரு சிறந்த பரிசாக உலகக்கிண்ணப் போட்டிகளை தென்னாபிரிக்காவில் நடத்துவதன் மூலம் நிவர்த்தி செய்யலாம் என 85 வயதான மண்டேலா கோரிக்கை விடுத்துள்ளது.

# "விளையாட்டு வீரர்களின் வெற்றிக்கு சைவ உணவின் முக்கியத்துவம்"

விளையாட்டு வீரர்களின் வெற்றிக்கும் உறுதிக்கும் உணவுப் பழக்கம் முக்கிய பங்கு வகிக்கின்றது. கடும் பயிற்சிக்கும் கடின வேலைக்கும் தனிநபர் ஒருவருக்கு உடல் ரீதியாகவும், உணர்ச்சி ரீதியாகவும் சைவ உணவுமுறை சிறந்த ஆரோக்கியத்தையும் உறுதியையும் தருவதாக நிரூபிக்கப்பட்டுள்ளது. சர்வதேச விளையாட்டு வீரர்கள் சபையினதும், பிரித்தானிய விளையாட்டு வீரர்கள் அணியினதும் முன்னைநாள் கௌரவ மருத்துவ அதிகாரியான சேர். அடொல்ட் ஏப்ராம்ஸ் என்பவர் **"Practitioner"** என்ற சஞ்சிகையில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"சைவ உணவு முறையானது தேவையான அளவு கலோரி பெறுமானம், முதல்தரமான புரதம், விற்றமின்கள் மற்றும் உடலுக்கு அவசியமானவைகள். அனைத்தையும் கொண்ட சகல வகையிலும் சமப்படுத்தப்பட்ட **(Well Balaced in allrespects)** நிறைவான ஒன்றாகும்".

நீச்சல், நீண்டதூர ஓட்டம், குத்துச்சண்டை, பாரம்தூக்குதல் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட சைக்கிள் ஓட்டப்போட்டிகள் ஆகியவற்றில் பல சாதனைகளைச் சைவ உணவுக்காரர்கள் நிலைநாட்டியுள்ளனர். சைக்கிளோட்டப் போட்டியில் 1960இல் பெரியபிரித்தானியாவின் சைவ உணவாளர்கள் சைக்கிளோட்டம் மற்றும் விளையாட்டுவீரர்கள் கழகம், தேசிய வீதிச் சாதனைகளில் 40 சதவீதத்தினைத் தனதாக்கிக் கொண்டது. பெரியபிரித்தானியாவில் "1963 களில் தொடர்ச்சியாக நடைபெற்ற பதினைந்து தேசிய சைக்கிளோட்டப்போட்டிகள் அனைத்திலும் "றொனால்ட் மூர்கா றொபிட்" என்ற சைவ உணவுக்காரர் வெற்றிபெற்றார். 25 மைல் ஓட்டம், 50 மைல் ஓட்டம், 100 மைல் ஓட்டம், 12 மணித்தியால ஓட்டம் ஆகியவற்றிலும், மணித்தியாலத்திற்கு 22.98 மைல்கள் என்ற சராசரி வேகத்துடன் ஓடி "சகல துறையிலும் சிறந்த வீரர்" **(Best allaround beterans championship)** என்ற விருதைப்பெற்றார்.

பெரிய பிரித்தானியாவிலும், ஐரோப்பாவிலும் நடைபெற்ற பல்வேறு போட்டிகளிலும் வேறு பல சைவ உணவுக்கார வீரர்கள் வெற்றிபெற்றுள்ளனர். மிகக்குறைந்த அளவு சைவ உணவுக் காரரே இப்போட்டிகளில் கலந்துகொண்டாலும் அசைவ உணவுக்காரர்களை விட உயர்ந்த சதவீத வெற்றியை எப்போதும் பெற்றுவிந் துள்ளனர் என்பது கவனிக்கப்பட வேண்டிய விடயமாகும்.

— உருத்திரர் சிவன் —

மேலும் நீச்சல்போட்டியில் மிகவும்பிரபல்யம் பெற்ற **"Murrayrose"** என்ற சைவ உணவு விளையாட்டுவீரர் 1956இல் அவுஸ்திரேலியா மெல்போனில் நடைபெற்ற ஒலிம்பிக்போட்டியில் 400மீற்றர், 1500 மீற்றர் பிறீஸ்ரைல் நீச்சல், 1500 மீற்றர்மரதன் நீச்சலோட்டப்போட்டி ஆகிய மூன்றிலும் தங்கப்பதக்கங்கள் பெற்று குறைந்த வயதில் "முத்தங்கம்" பெற்ற ஒலிம்பிக் வீரராகப் புகழப்படுகின்றார். இவர் நான்கு வருடங்களின் பின் 1960இல் ரோமில் நடந்த ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொண்டு 400 மீற்றர் நீச்சல்போட்டியில் மீண்டும் தங்கப்பதக்கம் பெற்று அடுத்த இரண்டு தடவை ஒலிம்பிக் பதக்கம் பெற்ற வீரர் என்ற பெருமையைப் பெற்றுக்கொண்டார். அடுத்து வந்த வருடங்களில் 400 மீற்றர், 1500 மீற்றர், பிறீஸ்ரைல் நீச்சலில் முன்னைய சாதனைகளை முறியடித்து எக்காலத்திலும் சிறந்த நீச்சல் வீரன் என்ற பெருமையையும் பெற்றார்.

பிரித்தானியாவைச் சார்ந்த சைவ உணவு வீரரான 'பில் பிக்கெறிங்' 1956இல் ஆங்கிலக் கால்வாயை அதிகூடிய வேகத்தில் கடந்து சாதனைபடைத்தது' மட்டுமல்ல 48 வயதான இவர் இங்கிலாந்தையும் வேல்ஸ்ஸையும் பிரிக்கும் "பிரிஸ்ரல் கால்வாயை" யாவரும் பிரமிக்கத்தக்க வகையில் குறுகிய நேரமாகிய 6 மணித்தியாலங்கள் 20 நிமிடங்களில் கடந்து புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டினார். 40 வருட இடைவேளையின் பின் இக்கால்வாயைக் கடந்த வீரன் என்ற பெருமையையும் பெறுகின்றார். (இவர் பற்றிய செய்தி **British Vegeterian** என்னும் சஞ்சிகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.)

சைவ உணவானது சிறந்த ஆரோக்கியத்தையும், வலிமையையும் தரவல்லது என்ற கருத்தை வலியுறுத்தும் வகையில் "வலிமை மிக்க இளமை யான அப்பலோ" என அழைக்கப்பட்ட திரு.அலெக்சாண்டர் மக்பெர்சன் அன்ராசனின் சாதனைகள் அமைந்திருந்தன. தொழில் ரீதியாக வலிமையான மனிதரான இவர் உலகளாவிய ரீதியிலும் அவுஸ்திரேலியா விலும் பாரம் தூக்கும் போட்டிகளில் பல சாதனைகளை ஏற்படுத்தியுள்ளார். அவரைப் பற்றி "சைவ உணவுகள் அவற்றின் குணங் கள்" **(Vegetarian foods their nutrient properties)** என்ற நூலில் அதன் ஆசிரியர் பின்வருமாறு கூறுகின்றார்.

அப்பலோ உலகிலுள்ள எவரையும் விட அதிகளவு தொன்களை தனது பற்களால் இழுத்துள்ளார். இவர் இரண்டு தடவைகள் மின் தண்டவாளத்தில் ஓடும் 22½ தொன் எடையுள்ள **Tran** ரக காரை சிறிய சாய்வில் மேல்நோக்கி 100 யார்வரை இழுத்துள்ளார். பல்வேறு சமயங்களில் இவர் தமது பற்களால் சண் பத்திரிகை விநியோகிக்கும் மோட்டார் வண்டிகள் நான்கையும் ஒன்றோடு ஒன்று பிணைக்கப்பட்ட ஐந்து பிரயாணிகள் மோட்டார் வண்டிகளையும் ஒரு இரட்டைத்தட்டுப் பேருந்தையும் இழுத்துள்ளார்.

சிப் ஒலிவர் என்பவர் உலக கால்பந்தாட்ட நட்சத்திர வீரர்களில் ஒருவர். இவர் பற்றி 1970களில் பிரசுரமான கட்டுரை ஒன்று **(Spots inustratel)** சைவ உணவின் மேன்மைக்கு ஒரு உரைக்கல்லாக அமைந்திருக்கின்றது. இவர் பலபோட்டிகளில் சிறப்பாக விளையாடிப் பல வெற்றிகளைக் குவித்தார் என்பது யாவரும் அறிந்ததே.

இவ்வாறாக, எல்லாவிளையாட்டுக்களிலும் சைவ உணவு உண்பவர்கள் முதன்மைப்படுகின்றனர் என்பதுடன் கடும் பயிற்சி, திடநம்பிக்கை, விட்டுக்கொடுப்பு, வெற்றிதோல்வியைச் சமமாக மதித்தல், அன்னியோன்னிய உறவு, விளையாட்டுப் பண்பியல்பு, ஆன்மீகம் போன்ற விடயங்களிலும் முன்னுதாரணமாகத் திகழ்கின்றனர். விளையாட்டு வீரர்களாகிய நாமும் எமது' உடல், உள ஆரோக்கியத்துக்கும் வெற்றிக்கும் உணவு வகைகளைத் தெரிவு செய்வதில் கூடிய கவனம் எடுத்து பல சாதனைகள் படைக்க வேண்டும் என்பதே அனைவரதும் விருப்பம்.

# சந்திரிகாவின் அதிரடி நடவடிக்கை — அவருக்கு சாதகமான சூழலை ஏற்படுத்தியுள்ளதா?



சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமார துங்க கடந்த வாரத்தில் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை சிறிலங்காவை இரு தினங்கள் திணறடித்துவிட்டது. அரசியலமைப்பு ரீதியாகத் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியுள்ளதாக அவர் கூறியுள்ள போதும் அது சிறிலங்காவில் மட்டுமல்லாது வடக்குக் கிழக்கிலும் ஒரு போர்க்காலச் சூழலை ஏற்படுத்தி விடுமோ? என்ற ஒரு ஐயத்தை ஏற்படுத்தி மக்களை கலக்கமுறச் செய்தது.

வழமையாக ஒரு தேர்தல் நடைபெற்று ஆட்சி மாற்றம் இடம்பெறுமானால், பல மாற்றங்கள் நிகழ்வது என்பது சாதாரண விடயம்தான். அதிலும் சிறிலங்கா போன்ற நேர் எதிர்ப் போக்குகளைக்கொண்ட அரசியல் கட்சிகளிடையே அதிகாரம் மாறி மாறிச் செல்லும் போது அரசியலமைப்பு முதல் கல்விக் கொள்கைவரை அனைத்திலுமே மாற்றங்கள் ஏற்பட்ட காலங்களும் உண்டு.

ஆனால் இந்த அதிரடி மாற்றங்கள் ஒரு இராணுவச் சதி அல்லது புரட்சியின் போது ஏற்படும் மாற்றங்கள் போல இம்முறை அமைந்திருந்தது. பாதுகாப்புடன்- உள்ளக, வெளி-தொடர்புடைய இரண்டு அமைச்சுக் களைச் சனாதிபதி சந்திரிகா பொறுப்பேற்ற துடன் எதுவித காரணமும் கூறாது வெகுசன தொடர்பு சாதன அமைச்சையும் பொறுப்பேற்றார். அத்துடன் லேக்கவுஸ், சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் ஆகிய இரு அர ஊடக அமைப்புகளை-இவை வெகுசனத் தொடர்பு அமைச்சுக்குள் வராத போதும் அவற்றையும்-தனது கட்டுப்பாட்டிற் குள் கொண்டு வந்தார்.

இவ்வாறு இம்மூன்று அமைச்சுக்களையும் தன் பொறுப்பில் கொண்டு வந்தமையானது உலகளாவிய ரீதியில் கரிசனைக்குரிய விடயமாக மாறியதுடன் உள்நாட்டில் பல கேள்விகளை எழுப்புவதாக அமைந்துவிட்டது. அடுத்து என்ன? என்ற கேள்வி என்றுமில்லாத வாறு இலங்கையை உலுப்பிக்கொண்டி ருக்கிறது. அதாவது அரசியல் அமைப்பு ரீதியாகவோ அல்லது அதனை மீறியோ எடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையானது இலங்கையில் என்றுமில்லாத ஒரு நெருக்கடியை ஏற்படுத்தி இருக்கிறது.

இவ்வாறு தான் எடுத்த அதிரடி நடவடிக்கையின் விளைவு எவ்வாறு இருக்கும்? ஐக்கிய தேசியக்கட்சி என்ன நடவடிக்கையை எடுக்கும்? என்பன குறித்த சந்திரிகாவின் எண்ணங்களுக்கு மாறாகசம்பவங்கள் இருந்தனவா? என்ற கேள்வியும் எழுகிறது. அதாவது தென்பகு தியில் குழப்பங்கள் ஏற்படலாம் என அவர் எதிர்பார்த் திருக்கலாம். அவர் இப்போது அவசரகாலச் சட்டத்தைப் பிரகடனப்படுத்த வில்லை என்று கூறினாலும் அச்சட்டத்தின் கீழ் எடுக்கப்படக் கூடிய நடவடிக்கைகள் இரு தினங்கள் எடுக்கப்பட்டன. ஆனால் ஐக்கிய தேசிய முன்னணியின் அமைதிப் போக்கும், அமெரிக்காவில் நின்ற ரணில் விக்கிரமசிங்க தனது விஜயத்தைக் கைவிட்டு ஓடிவராமையும் சனாதிபதி சந்திரிகாவிற்கு ஏமாற்றத்தை அளித்தி ருக்கலாம். மூன்று முக்கிய அமைச்சுக் களை அதிரடியாகப் பறித்ததால் ஆத்திர மடைந்து ஐ.தே.க.வினர் கலவரங்களில் ஈடுபடலாம். அதனைச் சாட்டாக வைத்து ஐ.தே.க.தலைவர்களைக் கைது செய்ய வும் அவர் திட்டமிட்டிருக்கலாம்.

சிறிலங்காவில் அமைதி நிலவிய போதும் அமெரிக்காவிலிருந்து கொழும்பு திரும்பியதும் பிரதமர் ரணில் விக்கிரம சிங்க கைது செய்யப்படலாம் எனச் சில ஊடகங்கள் ஊகம் வெளியிட்டன. அவ் வாறு ஒரு திட்டம் இருப்பின் அதனைத் தடுக்கத் தலைவருக்கு வரவேற்பு என்ற பெயரில் ஐ.தே.க. சர்வதேச விமான நிலைய த்திற்கு ஆதரவாளர்களைத் திரட்டியது. வழமைக்கு மாறாக வழங்கப்பட்ட இவ் ''வரவேற்பு'' ஐ.தே.க.வுக்குச் சாதகமாகவும் சந்திரிகா குமாரதுங்கவிற்கும் அவரது கட்சியினருக்கும் பெரும் சஞ்சலத்தையும் ஏற்படுத்தி விட்டது. ஐ.தே.க.வினர் திடீரெனச் செய்த இந்த ஏற்பாடு அவர்களே எதிர்பாராத விளைவை ஏற்படுத்திவிட்டது.

2001 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஒரே ஒரு பெரும்பான்மை அங்கத்தவருடன் ஆட்சி பீடமேறிய ஐக்கிய தேசியக்கட்சி,தனது சாதனையாக சமாதான முயற்சிகளையும்-குறிப்பாகப் போர் நிறுத்தம்-


திலக்மாரப்பன

அதனால் கிடைத்த பொருளாதார வளர்ச்சியையுமே கூறக் கூடிய தாக உள்ளது.

ஆனால் சமாதான முயற்சியில் ஏற்பட்ட தேக்க நிலையானது தென்னிலங்கை மக்கள் மத்தியில் ஐ.தே. முன்னணியின் செயற்பாடுகள் குறித்தும் நிலையான இறுதித் தீர்வை அதனால் எட்டமுடியுமா? என்று எழுந்த கேள்வி சமாதான நடவடிக் கைகள் குறித்தும் சலிப்பைஏற்படுத்தி இருந்தன. அத்துடன் ஐ.தே.க.வின் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான தீவிரபிரச்சாரங்கள், அதற்குக் கிடைத்த ஆதரவு, ஜே.வி.பி.யினரின் வளர்ச்சி என்பனவும் ஐ.தே.க.வுக்குச் சலனத்தை ஏற்படுத்தின. அத்துடன் ஐ.தே.க.வினை மக்களின் வாழ்க்கைத் தரத்தில் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வகையில் பொருளாதார ரீதியாக எதனையும் செய்ய முடியவில்லை. இது தனது மக்கள் செல்வாக்குக் குறித்து ஐயத்தை அதற்கு ஏற்படுத்தியிருந்தது.

ஆனால் சிறிலங்கா சுதந்திரக்கட்சி பெரும் ஏற்பாட்டில் நடத்திய ஊர்வலத்திற்குக் கிடைத்த தோல்வியும்,ரணிலுக்கு வழங்கப்பட்ட திடீர் வரவேற்பிற்குக் கிடைத்த வெற்றியும் ஐ.தே.க.விற்குப் புதிய தெம்பைக் கொடுத்திருக்கிறது.

இதேவேளை ரணில் விக்கிரமசிங்கவிற்கு வழங்கப்பட்டுள்ள சர்வதேச ஆதரவும் ஐ.தே.க.விற்குக் கிடைத்த புதிய ஊக்க மாகவே கொள்ளலாம். சமாதான முயற்சிகளுக்கு ஊறு விளைவித்துவிடக் கூடாது எனச் சர்வதேச நாடுகள் கூறும் அறிவுரை-அல்லது எச்சரிக்கை ஐ.தே.க. விற்குச் சாதகமானது என்பதில் ஐயமில்லை.

இவ்வாறான நிலையில் சந்திரிகா அடுத்து எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் எவை? அதற்கு ஐ.தே.க. எவ்வாறு பதில் வழங்கப் போகிறது?

முதலாவதாக ஐக்கிய தேசிய முன்னணிக்கு உள்ள பெரிய பலம் அது தற்போது மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகள். எனவே தானும் சமாதான நடவடிக்கைகளைத் தொடரப்போவதாகச் சனாதிபதி சந்திரிகா கூறியிருக்கிறார். ஆனால் தேக்கநிலை அடைந்துள்ள பேச்சுவார்த்தைகள் நகரத்தக்க வகையில் விடுதலைப்புலிகள் முன்வைத்துள்ள இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை குறித்து அவர் எதிரான அபிப்பிராயத்தையே வெளிப்படுத்தி வருகிறார். இதேவேளை ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் முரண் பாடுகளை நீக்கும் வகையில் பேச்சுக்களுக்குத் தயாராக உள்ளதாக அறிவித்திருந்தது.

அதுமட்டுமல்லாது, ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் எடுத்துவந்த சமாதான முயற்சிகள் அனைத்துமே தவறு என விமர்சித்து வரும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அம் முயற்சியை எவ்வாறு தொடர முடியும்? இம்முரண்பட்ட நிலையில் சமாதான முயற்சிகளைச் சனாதிபதி சந்திரிகாவைப் பொறுப்பேற்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டிருப்பது ரணிலின் ஒரு வியூகமாகவே கருதப்படக் கூடியது.

இரண்டாவதாக பாராளுமன்றைக் கலைத்துப் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தும் முடிவிற்கு சந்திரிகா வருவாரா?

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்தவரை, பொலிஸ் மற்றும் வெகுசன தொடர்பு சாதன அமைச்சுக்களைக் கைக்குள் வைத்துக்கொண்டு தேர்தல் ஒன்றைச் சந்திப் பதுதான் சாதகமான நிலையைத் தோற்று விக்கும் என்பது அவரது அனுபவமாகும். அவையிரண்டும் அவரது வசம் வந்துவிட்டன. ஆனால் கட்சிக்குள்ள மக்கள் செல்வாக்குக் குறித்துப் பலத்த சந்தேகம் இப்பொழுது எழுந்திருக்கின்றது. இந்நிலையில் பொதுத் தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதற்கு முன்னர் மாகாணசபைத் தேர்தல் அல்லது பிரதேச சபைத் தேர்தல்களை நடத்திப் பார்க்க அவர் முயலலாம்.

மூன்றாவதாகப் பாராளுமன்றத்தைக் கலைக்காது ஆட்சி அமைப்பது. இதற்கு அவருக்குச் சில ஐ.தே.க.பாராளுமன்ற உறுப பினர்களின் ஆதரவுடன் ஜே.வி.பி.யினரையும் வழிக்குக் கொண்டுவர வேண்டிய தேவை இருக்கின்றது. எவ்வாறாயினும் ஐ.தே.முன் னணி அரசாங்கத்தைக் கவிழ்த்துவிடத் துடிக்கும் ஜே.வி.பி.யின் ஆதரவு அவருக்குக் கிட்டலாம். ஆனால், ஐ.தே.க.உறுப் பினர்களைப் பிடிப்பது முன்னரைவிடச் சிரமமானது என்றே கூறவேண்டும்.

சனாதிபதி சந்திரிகா பாராளுமன்றத்தைக் கலைத்துவிடுவாரோ என்ற ஐயம் இருப்பின் அதனைத் தவிர்க்கச் சில பின்வரிசை உறுப்பினர்கள் பொ.ஐ.மு.வுடன் இணையக் கூடிய சாத்தியம் உள்ளது. அது குறித்து அச்சம் இல்லையாயின் அதற்கான வாய்ப்பும் குறைவடையும். ஆனால் ஐ.தே.முன்னணியில் பிளவை ஏற்படுத்தும் முயற்சி தொடரவே செய்யும்.

அடுத்தது தேசிய அரசாங்கம் ஒன்றை அமைத்தல். இதனைச் சந்திரிகா குமாரதுங்க இப்பொழுது வெளிப்படையாகக் கோரியிருக்கிறார். சகவாழ்வு அரசியலின் அஸ்தமனமானது ஐக்கியதேசியக் கட்சியை



அவ்வாறானதொரு ஆட்சியில் அங்கம் வகிக்கத் தூண்டாது. அத்துடன் இரு அதிகார சக்திகளும் இணைந்துகொள்ள வாய்ப்புக் குறைவே. எனவே சந்திரிகா கோரும் தேசிய அரசாங்கம் என்பது ஐ.தே.க.வைத் தவிர்த்து அமைக்க முடியும் என்றாலே சாத்தியமாகும். ஆனால் அவ்வாறு அமையும் அரசாங்கம் முரண்பாடுகளின் கூட்டாகவே இருக்கும் என்பதால்அதன் ஆயுட்காலம்மும் குறுகிய தாகவே இருக்கும்.

இவற்றுக்கு எதிரான ஐ.தே.க.வினரின் நடவடிக்கை எவ்வாறு இருக்கும்? முதலாவது நடவடிக்கையாகவே ரணில்விக்கிரம சிங்க பேச்சுக்களை சனாதிபதி பொறுப்பேற்குமாறு விடுத்த கோரிக்கை.மூன்று அமைச்சுகளையும் திருப்பித்தராவிட்டால் சமரசத்திற்கே இட மில்லையென அறிவித்துவிட்டுப் பாதுகாப்பு அமைச்சு இல்லாது பேச்சுக்களை நடத்த முடியாது என அறிவித்திருப்பது ஐ.தே.க.வின் முதலாவது நடவடிக்கை.

**வேலவன்**

பாராளுமன்றத்தில் ஐ.தே.மு.வுக்குப் பெரும் பான்மையுள்ள நிலையில், நீண்ட நாட் களுக்குப் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கச் சனாதிபதியால் முடியாது.எனவே பாராளு மன்றத்தின் மூலம் கொடுக்கக் கூடிய தொல் லைகளை ஐ.தே.மு. கொடுக்கும். பிரதம நீதி யரசரின் மீதான நம்பிக்கையில்லாப் பிரேரணை என்பது சனாதிபதியின் மீதான குற்றவியல் பிரேர ணைக்கு முதற்படியாக அமையும்.

அடுத்ததாக பொதுத் தேர்தல் ஒன்றை உடனடியாக எதிர்கொள்ளவும் ஐ.தே.மு.தயா ராக இருக்கிறது. எனவே சபாநாயகர் மூலம் பாராளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தல் ஒன்றைச் சந்தித்தால் சனாதிபதியின் கலைக் கும் அதிகாரத்தை ஒரு வருடத்திற்குத் தள்ளிப்போடலாமென அது நினைக்கிறது.

இன்று நிலவுகின்ற சர்வதேச சூழ்நிலை ஐ.தே.மு.அரசாங்கத்திற்கே சாதகமாக உள் ளது. அதனை எதிர்த்து நிற்கும் துணிவு இரண்டு வருடங்களை மட்டுமே பதவிக் காலத்தைக் கொண்டுள்ள சந்திரிகாவுக்கு வருமா?

ஆனால் அவரின் இந்த இரண்டு வருடகாலக்கெடுவானது அவரை முரட்டுத் துணிச்சலுடன் கூடிய அதிரடி நடவடிக் கைகளுக்குத் தள்ளக்கூடிய வாய்ப்பும் உள்ளது.

## சனாதிபதியின் தீர்மானங்கள் அவர் தகுதியற்றவர் என்பதைக் காட்டுகிறது

*— அமைச்சர் ஜே.எம். லொக்கு பண்டார*

(கொழும்பு)

சனாதிபதியின் தன்னிச்சையான தீர்மானங்கள் அவர் சனாதிபதி பதவிக்கு தகுதியற்றவர் என்பதை வெளிப்படுத்தியுள்ளதாக பாராளு மன்ற அவைத் தலைவர் டபிள்யு. ஜே.எம் லொக்குபண்டார தெரிவித் துள்ளார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பேசும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர் அதிகாரங்கள் அதிகமாக இருக்கும் வேளை அதனைப் பயன்படுத்தும் போது சிந்தித்து செயற்படுத்த வேண்டும். உயர் நீதி மன்றம் தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு முன்னர் சனாதிபதி தீர்மானத்தை எடுத்து உயர் நீதிமன்றத்தின் தீர்மானத்தை உறுதிப்படுத்த முனைகின்றார் என அவர் மேலும் கூறினார்.

## இறுதிக் கிரியைகளுக்கும் படையினர் முட்டுக்கட்டை!

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் திருவடிநிலை மயா னத்திற்கு தகனக்கிரியைகளுக்காக சடலங்களை எடுத்துச் செல்வோர் மீது படையினர் பெரும் கெடு பிடிகளை மேற்கொள்வதாகத் தெரி விக்கப்படுகிறது.

மேற்படி மயானத்துக்கு சட லங்கள் எடுத்து வரப்படும் போது வெடிகள் கொளுத்தவோ பறைகள் முழங்கவோ கூடாது எனவும் தமது தடை முகாமைத் தாண்டி சிலர் மட்டுமே தகனக் கிரியைக்காகச் செல்லலாம் எனவும் எச்சரித்து வருவதால் இயல்பான முறையில் இறுதிக் கிரியைகளைக் கூட செய்ய முடியாதது குறித்து கடும்விசனம் எழுந்துள்ளதுடன் இப் படையினரின் நடவடிக்கையால் அடிக்கடி மக்க ளுக்கும் படையினருக்குமிடையே முறுகல் நிலை உருவாகுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

# வவுனியாவில் காடுகள் அழிக்கப்படுவதை கட்டுப்படுத்த புலிகள் நடவடிக்கை

## -விறகு வியாபாரிகளுடன் கலந்துரையாடல்

(வவுனியா)

வவுனியாவில் அண்மைக்காலமாக தொடர்ச்சியாகக் காடுகள் அழிக்கப்படுவதால் இதனைக் கட்டுப்படுத்தும் முகமாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் விறகு வெட்டி விற்கும் வியாபாரிகளை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

வவுனியா புதுக்குளம் சனசமூக மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில், விறகு வெட்டுபவர்கள் காய்ந்த மரங்களை வெட்டவேண்டும் எனவும் பச்சை மரங்களை வெட்டக் கூடாது எனவும் புலிகள் இவ்வேளை கேட்டுக்கொண்டனர்.

இதே வேளை பலகைத் தேவைக்கு மரம் தேவைப்படின் வனவளப் பிரிவுடன் தொடர்பு கொண்டு மரங்களைப் பெற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் 300க்கு மேற்பட்ட துவிச்சக்கர வண்டி விறகு வியாபாரிகள் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (21)


## சேரன் வாணிபம்

### ஊர்தி ஓட்டுநர் பயிற்சிநெறிக்கான வேண்டுகை

எமது வாணிபத்தினால் மேற்கொள்ளப்படும் ஊர்தி ஓட்டுநர் பயிற்சி நெறிக்கு வேண்டுகைகள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்:-**

1. வயது 21 - 28ற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. உயரம் 5' 3"ற்கு மேல் இருத்தல் வேண்டும்.
3. எடை 53 கிலோவிற்கு மேல் இருத்தல் வேண்டும்.
4. ஆண்டு 08 வரை கல்வி கற்றிருத்தல் வேண்டும்.
5. வன்னிப் பெருநிலப்பரப்பில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமை உடையோர் கீழ்க் காணும் முகவரிக்கு தேசிய அடையாள அட்டை, குடும்பஅட்டை,கல்விச் சான்று என்பவற்றுடன் 2003-11-14 நாளன்று காலை 10.00 மணிக்கு நேரில் சமுகம் தருமாறு வேண்டப்படுகிறீர்கள்.

நடுவப் பணியகம்,
சேரன் வாணிபம்,
கிளிநொச்சி.

(சி-8697)


# நோயாளர் அவதி

ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலை அடிப்படை வசதிகளற்று இயங்கி வருவதால் அப்பகுதி வாழ் மக்கள் தம் மருத்துவ தேவைகளை நிறைவுபடுத்த முடியாது பெரும் அவலப்பட்டு வருகின்றனர்.

தீவகப் பகுதியில் பிரதானமான வைத்தியசாலையாக இது இருக்கின்ற போதிலும் தேவையான வைத்தியர்கள்,தாதியர்கள்,மருத்துவ தளபாடங்கள் அற்றுக் காணப்படுவதால் இப்பகுதி நோயாளிகள் நீண்டதூரப் பயணத்தை மேற்கொண்டு யாழ்.போதனா வைத்தியசாலைக்கு வரவேண்டிய சூழ்நிலை காணப்படுகின்றது. (33)

# அறிவுறுத்து

(மல்லாவி)

துணுக்காய் பாண்டியன் குளம் பிரதேசத்தில் 2003,2004 ஆம் ஆண்டிற்கான காலபோக நெற்செய்கை ஆரம்பமாகி உள்ளதால் அனைத்துக் கால்நடை வளர்ப்போரும் தங்கள் கால்நடைகளைக் கட்டுப்படுத்தி விவசாயிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் செயற்படுமாறு கேட்கப்பட்டுள்ளது. துணுக்காய்ப் பிரதேச தமிழீழ பொருண்மிய மேம் பாட்டு நிறுவனமும் பிரதேச கமநல மத்திய நிலையமும் இது குறித்து அறிவுறுத்தியுள்ளன. (24)

# விவசாய உள்ளீடுகள் அன்பளிப்பு

(ஒட்டுசுட்டான்)

எக்கோ கெயர் நிறுவன நிதியுதவியுடன் பொருண்மிய மதியுரையகத்தால் 2003-2004 ஆம் ஆண்டிற்கான காலபோகப் பயிர்ச்செய்கைக்குப் பயிற்சி வகுப்புக்கள் நடாத்தியதுடன் முத்து ஐயன் கட்டுக் கிராமத்தில் 125 பயனாளிகளுக்குத் தலா ரூபா 9000 வீதம் நெற்செய்கைக்கும் சின்னசாளம்பன் கிராமத்தில் 40 பயனாளிகளுக்குத் தலா ரூபா 4500 வீதம் சிறு தானியப் பயிர்ச்செய்கைக்கும் என அன்பளிப்பாக உள்ளீடுகள் வழங்கப்பட்டுள்ளன. (05)

# ரணில் அரசிற்கு பூரண ஆதரவு பிரிட்டிஷ் அமைச்சர் அறிவிப்பு

(கொழும்பு)

விஞ்ஞான கைத்தொழில் அமைச்சர் மிலிந்த மொறகொட நேற்று முன்தினம் பிரித்தானிய அமைச்சர் மைக் ஒப்ரெயினைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

அபிவிருத்தித் திட்டங்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதாகவும் ரணில்விக்கிரமசிங்க அரசாங்கத்திற்கு பூரண ஆதரவு வழங்குவதாகவும் ஜனநாயக சட்டதிட்டங்களுக்குட்பட்ட சமாதானத் தீர்வை விரும்புவதாகவும் பிரித்தானிய அமைச்சர் மிலிந்த மொறகொடவிடம் தெரிவித்தார்.

# மட்டு-அம்பாறையில் பெருமழை இயல்பு வாழ்க்கை பாதிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்து வருவதால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

தாழ்ந்த பகுதிகளில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. மட்டக்களப்பு வாவியின் நீர் மட்டமும் உயர்ந்துள்ளது.தாழ்ந்த பகுதிகளில் செய்கை பண்ணப்பட்ட பெரும்போக வேளாண்மை நீரில் மூழ்கியுள்ளது.

பாரிய குளங்களான நவகிரி, உன்னிச்சை, உறுகாமம், வாகனேரி, தும்பங்கேணி ஆகிய குளங்களின் நீர் மட்டமும் உயர்கின்றன.


## 10 ஆம் ஆண்டு நீங்காத நினைவில்



பிறப்பு
31
05
1967

வீரச்சாவு
11
11
1993

### லெப்.கேணல் சூட்/அருணன்

### நவரட்ணம் விக்கினராஜா

பூநகரிப் போர்தனிலே புது வீரம் காட்டிய
மறவர்கள் நினைவோடு.

போர் மறவா! அருணா
புலிகளைப் பூனையென
நினைந்து வந்த ஆனைப்படை போய் முடிய
வீர வீணைப் பேழையில் - நீ வந்தாய்
காளையே அருணா!
வேளை வருகிறது
விழி திறந்து வாடா நீ
மாவீரக் குலத்தோடு.

தவளைத் தாக்குதலில் இவருடன் வீரச்சாவடைந்த அனைத்து மாவீரர்களையும் நினைவு கொள்கின்றோம்.

நாயன்மார் கட்டு,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

(3861)



## 2 ஆம் ஆண்டு நினைவலைகள்

தாய் மடியில்
10
02
1979



தமிழ்த்தாய் மடியில்
11
11
2001

### லெப்.கேணல் சிவநேசன்

(செல்லத்துரை-புருஷோத்தமன்)

என் உயிரோடு கலந்திட்ட உயிர்ப்பூவே
உன்னதங்களால் எழுதப்பட்ட
உந்தன் வரலாற்று நிகழ்வு
ஒரு போதும் அழிந்திடா.

முகவரி:-
தங்கமதி
நகையகம்,
மல்லாவி.

(சி-8696)

மகன் :-
தனுராஜ்,
விகிந்தன்.



## யாழிற்காய் விழுதெறிந்து நின்ற ரோஜாவின்

## 2ஆம் ஆண்டு நினைவுகள்

யாழில்
10
-
02
-
1979

யாழிற்காய்
11
-
11
-
2001



### லெப்.கேணல் சிவநேசன்

(வெள்ளை,ஜக்கோல்,புருஸ்)

செல்லத்துரை-புருஷோத்தமன்

(யா/தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவன்)

ஊரெழு மேற்கு, சுன்னாகம்.

உனது மறைவு
ஒரு துயரமென்றாலும்
அது எமது இனத்தின்
துயர நீட்சிக்கு முற்றுப்புள்ளியிட
முனைந்த வரலாறு
ஆகவே தான்
கரடுமுரடான உனது பாதையில்
கனவுகள் நனவாகும் வரை கால்கள்
பயணிக்கும்.

இவருடன் வீரச்சாவடைந்த கப்டன் பருதியப்பன், கப்டன் தூயோன்,கப்டன் ரூபன் ஆகியோரையும் இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(3851)

குடும்பத்தினர்.



**சிந்தனைக்கு**

மக்களின் துன்பங்களில் நாம் பங்கெடுத்துக் கொள்ளும் போது தான் மக்கள் எம்முடன் இணைந்து கொள்வார்கள்.

தமிழீழத்தேசியத் தலைவர்

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளேடு
யாழ்.சாலை, கிளிநொச்சி. 11-11-2003

## நெருக்கடியின் மையம்

பாதுகாப்பு அமைச்சின்றி யுத்தநிறுத்தத்தைக் கடைப் பிடிக்க முடியுமா? என்பதே இன்று பலரதும் கேள்வியாகும். இக் கேள்வியின் பதிலானது சிறிலங்காவின் எதிர்காலத் தையே தீர்மானிக்கத்தக்க மில்லியன் ரூபா பெறுமதி யானதாகும். மறுவளமாகக் கூறினால் இன்று சிறிலங்காவில் ஏற்பட்டுள்ள நெருக்கடியின் மையமாக இருப்பதே இப்பாதுகாப்பு அமைச்சுத் தொடார்பான விவகாரமாகும்.

ஐ.தே.முன்னணி அமைச்சரான திலக் மாரப்பன விடமிருந்து சனாதிபதி பாதுகாப்பு அமைச்சைப் பறித் தெடுத்தமையானது சமாதானத்தின் எதிர் காலத்தையே கேள்விக்குரியதொன்றாக்கியுள்ளது. அதாவது பாதுகாப்பு அமைச்சுப் பறிக்கப்பட்டதானது சமாதானப் பேச்சு வார்த்தைகளின் அடித்தளத்தையே ஆட்டம் காணச் செய்யும் ஒன்றாகியுள்ளது.

ஐ.தே.முன்னணி அரசாங்கம் சமாதானப் பேச்சுவார்த் தைகளை முன்னெடுப்பதற்கு அடிப்படையாகவே யுத்த நிறுத்த உடன்பாட்டைச் செய்துகொண்டது. வேறுவகையில் கூறுவதானால் சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தளமாக அமைந்துள்ளதே இவ் யுத்தநிறுத்த உடன்பாடாகும்.

ஆனால், தற்பொழுது பாதுகாப்பு அமைச்சைப் பொறுப் பேற்றுள்ள சனாதிபதி சந்திரிகா, யுத்தநிறுத்தத்தைப் படையினர் கடைப்பிடிப்பர். அரசாங்கம் சமாதானப் பேச்சு வார்த்தைகளைத் தொடரலாம் எனத் தெரிவிக்கின்றார். ஆனால் ஐ.தே.மு.அரசாங்கமோ பாதுகாப்பு அமைச்சு பறிக்கப்பட்டதினால் பேச்சுவார்த்தைகளையும் சனாதி பதியே தொடரவேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தைப்பொறுத்து பாதுகாப்பு-அமைச்சு இன்றியுத்தநிறுத்தத்தை கைக்கொள் வது என்பது சாத்தியமற்றதென்பது நிலைப்பாடாகும். இது நிராகரிக்கப்பட முடியாததொன்றாகும். அதாவது படையினர் மீது கட்டுப்பாடின்றி யுத்தநிறுத்தம் ஒன்றைக் கையாள் வதென்பது நடைமுறையில் சாத்தியமற்றதொன்றாகும்.

அதிலும் குறிப்பாக எதிர்த்தரப்பினரிடம் பாதுகாப்பு அமைச்சு இருக்கையில் சமாதான முயற்சிகளை முன்னெடுத்தல் என்பது இயலாததொன்றாகவே இருக்கும். அதிலும் குறிப்பாக சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் ஆயுதப்படையினர் மீதான கட்டுப்பாடு முழுமையாக இருக்கையில் இது சாத்தியப்படப்போவதில்லை.

பாதுகாப்பு அமைச்சு ஐ.தே.முன்னணியிடம் இருக்கையி லேயே முப்படைகளின் தளபதி என்ற ரீதியில் சனாதிபதி சந்திரிகா மேற்கொண்ட நடவடிக்கைகள் ஏற்கனவே சமாதானத்திற்கு சவாலாக அமைந்ததுண்டு. குறிப்பாகக் கடற்படையின் நடவடிக்கைகள் இதற்குச் சவாலாகியதுண்டு.

இதற்கு அடிப்படையாக இருந்தது சனாதிபதி முப்படைத் தளபதிகளுக்கும் உத்தரவிடும் அதிகாரத்தைக் கொண் டிருந்தமையேயாகும். இந்நிலையில், பாதுகாப்பு அமைச்சும், சனாதிபதியினதோ அன்றி அவரின் பிரதிநிதிகளின் கட்டுப்பாட்டிலோ இருக்கையில் சமாதான முயற்சிகள் தொடர்தல் என்பது எவ்வாறு சாத்தியப்பாடானதொன்றாக இருக்கப்போகின்றது?

அது மட்டுமல்ல, சனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கை யானது ஏற்கனவே போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவைச் செயலிழக்கச் செய்துள்ளது. போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழுத்தலைவரைத் திரும்ப அழைக்குமாறு சனாதிபதி சந்திரிகா நோர்வே அரசிற்கு விடுத்திருந்த கோரிக்கையா னது இதற்குக் காரணமாகும். தற்போதைய சூழ்நிலையில் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு செயற்படுகின்றதா? அதன் அதிகாரங்கள் என்ன? போர்நிறுத்தக் கண்காணிப் புக்குழுத் தலைவர் பதவி வெற்றிடமாக உள்ளதா? அன்றி ரெலவ்சனே தொடர்கின்றாரா என்பது போன்ற கேள்விகள் பலமாகவே உள்ளன.

இவ்வாறான நெருக்கடிகள் பாதுகாப்பு அமைச்சு ஐ.தே.க. முன்னணி அரசாங்கத்திடம் இருக்கையிலேயே எழுந்தி ருந்தன.

இந்த வகையில் பாதுகாப்பு அமைச்சு சனாதிபதியால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் அரசாங்கம் எவ்வாறு சமாதா னப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்துச் செல்ல இய லும்?

சனாதிபதி சந்திரிகா கூறுகின்றார் என்பதற்காக ஐ.தே. முன்னணி அரசாங்கம் பேச்சுவார்த்தைகளை எவ்வாறு அமைப்பது? சமாதானத்தைப் பாதுகாப்பது?

# புலிகளின் இடைக்கால தன்னாட்சி அதிகார சபை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒன்றாகும்

## பேராசிரியர் ஜயந்த செனவிரட்ண

(கொழும்பு)

விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள இடைக்கால நிர்வாக சபைக்கான மாற்று யோசனைகள். தட்டிக் களிக்க முடியாத ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய தொன்றாகும். என்று கணினி பல்கலைக்கழக பேராசிரியர் ஜயந்த செனவிரட்ண தெரிவித்துள்ளார்.

இது பற்றி அவர் மேலும் கருத்து தெரிவித்துள்ளதாவது 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பை அமைக்கும் போது எதிர் காலத்தில் இனப்பிரச்சினைக்கு எவ்வாறான தீர்வை ஏற்படுத்த முடியும் என்பதை எவரும் சிந்திக்க வில்லை.

இன்று ஏற்பட்டுள்ள அரசியலமைப்பு நெருக்கடி காரணமாக தெற்கின் அரசியல் எந்தளவிற்கு நெருக்கடிக்கு தள்ளப்பட்டுள்ளது என்பதை நன்கு காணமுடிகிறது.

விடுதலைப் புலிகள் இடைக் கால தன்னாட்சி அதிகார சபை யோசனையில் தமது எதிர் பார்ப்புக்களை நன்கு எடுத்து வைத்துள்ளனர். பாரிய தியாகத் துடன் போராட்டத்தை மேற் கொண்ட புலிகள் குறைந்த பட்ச திட்டங்களை முன்வைக்க மாட் டார்கள். அண்மைக் காலமாக கொழும்பு நகரில் " ஈழத்தைக் கொடுக்க வேண்டாம்", " நாட்டைப் பிரிக்க வேண்டாம் என்ற வாசகங்கள் கொண்ட சுவரொட்டி களை காணக் கூடியதாக இருந்தது.

புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டதன் பின்னர் வட-கிழக்கில் அடிப் படைத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கென அரசாங்கம் குழு வொன்றை நியமித்தது. ஆனால் அதன் செயற்பாடுகள் ஊழல்கள் நிறைந்ததாகக் காணப்பட்டதா லேயே அது செயலிழந்தது போயுள்ளது.

அதனால்,விடுதலைப் புலிகள் மீள் குடியமர்த்தல், புனரமைப்பு, மீள் கட்டமைப்பு,அபிவிருத்தி ஆகியவற்றை தமது திட்ட வரைவில் நன்கு தெரியப்படுத் தியுள்ளனர்

விடுதலைப் புலிகளின் திட்ட வரைவு மிகவும் முக்கியமானது.அதனை நாம் தட்டிக் களிக்க முடியாது இதற்கொரு சிறந்த நிர்வாகம் ஒன்று இருக்க வேண் டும். அதனை விடுதலைப் புலி கள் நன்கு திட்டமிட்டுள்ளனர்.

மீள் புனரமைப்புக்காகவே புலி கள் இடைக்கால தன்னாட்சி அதி கார சபையைக் கோரியுள்ளனர் இந்த யோசனையை நாம் ஏற் றுக்கொள்ள வேண்டும் என்றார்.

# சனாதிபதி எடுத்த தீர்மானங்கள் பற்றி எங்களுக்கு எதுவும் தெரிவிக்கப்படவில்லை

## - பட்டி வீரக்கோன் ஆதங்கம்

(கொழும்பு)

சனாதிபதி சந்திரிக்கா குமார துங்க எடுத்த தீர்மானங்களைப் பற்றி எங்களுக்கு எதுவும் தெரி யாது எமது கட்சியினருக்கும் அவர் அறிவிக்கவில்லை என்று பொதுசன ஐக்கிய முன்ன ணிக்குள் அங்கம் வகிக்கும் லங்கா சமஜமாசக் கட்சி தலைவர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.

அவர் இது குறித்து மேலும் தெரிவிக்கையில் தற் பொழுது பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன இந்த பிரச்சினைகளை பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்த்துக் கொள்ள வேண்டும் இரண்டு கட்சி களும் இரண்டு பக்கங்களுக்கு சென்றால் அதில் பின் விளை வுகள் மிகவும் கடுமையாக இருக் கும்.

நாங்கள் அடிக்கடி கூறியது என்னவென்றால் இரண்டு கட்சி களும் இணைந்து இப் பிரச் சினைக்கு தீர்வு காண வேண்டும் என்பதே ஆகும்.

தற்பொழுது விடுதலை புலி களினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள சமஷ்டி ஆட்சி முறை சம்மந் தப்பட்ட நகல் திட்டத்தினை சனா திபதி நிராகரிப்பதாக நான் கருத வில்லை. என்றும் பட்டி வீரகோன் கூறி உள்ளார்.

# சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதில் இராணுவம், பொலிஸ் உறுதியாகவுள்ளது

## -கூட்டுப்படைத் தளபதி அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் சட்டத்தையும் ஒழுங் கையும் நிலை நாட்டுவதில் இராணுவமும் பொலிசும் உறுதி யாகவுள்ளதாக கூட்டுப் படைத் தளபதி லயனல் பல கல்ல சண்டே ஒப்சேவருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

சனாதிபதியின் கட்டளைப்படி உறுதியாக இருப்பதாகவும் மேலும் அவர் தெரிவித்தார்.

ஆனால் இதுவரை எதுவித குழப்பமும் ஏற்படவில்லையென பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரி வித்துள்ளார். நாட்டின் எந்தப் பகுதியாக இருந்தாலும் தேவை ஏற்படும் போது அந்த இடத் திற்கு உடனடியாக இராணுவம் அனுப்பப்படுமென யென் மார்சல் டொனால்ட் பெரேரோ தெரிவித் தார்.

# வளலாய்ப் பகுதியில் படையினரின் கெடுபிடிகளால் மக்கள் மீள்குடியமர்வதற்கு அச்சம்

(யாழ்ப்பாணம்)

அச்சுவேலி வளலாய்ப் பகுதி யில் உள்ள பாதுகாப்பு வலயத்தை அண்மித்த பகுதிகளில் மீளக் குடியேறியுள்ளவர்கள் மீது படையினர் திணித்துவரும் கெடு பிடி நடவடிக்கைகளால் அப்பகு தியில் மீளக்குடியமர மக்கள் அஞ்சி வருகின்றனர்.

மேற்படிப் பிரதேசம் பலாலிப் படைத்தளத்தின் முன்னணி நிலைகளைக் கொண்டவை ஆகையால் தற்பாதுகாப்புக் கருதி இப்பகுதி மக்களை நிரந் தர வீடுகள் அமைக்கவும் சுதந் திரமாக நடமாடவுமே பல தடை கள் விதிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து 3800குடும்பங்கள் வாழ்ந்த இப்பிரதேசத்தில் தற்பொழுது 282 குடும்பங்களே மீள்குடியே றியுள்ளன. (33)

# இந்திய அணி மார்ச் மாதம் பாகிஸ்தான் செல்வது உறுதி

## கிரிக்கெட் குழுத் தலைவர் அறிவிப்பு

15 ஆண்டுக்களுக்குப் பின்னர் கிரிக்கெட் அணி வரும் மார்ச் மாதம் பாகிஸ்தானுக்குச் செல்லவுள்ளது.

பாகிஸ்தானுடன் இருதரப்பு கிரிக்கெட் போட்டிகளுக்கு மத்தியரசு ஒப்புதல் அளித்துள்ள நிலையில், இந்திய கிரிக்கெட் அணி15வருடகால இடைவெளிக்குப் பின்னர் எதிர்வரும் மார்ச் மாதம் பாகிஸ்தான் செல்லவுள்ளது.

இதனை கல்கத்தாவில் நேற்று முன்தினம் இந்தியா கிரிக்கெட் குழுவின் தலைவர் ஜக் மோகன் டால்மியா இதைக் கூறியுள்ளார்.

# கவாஸ்கரின் விருப்பம்

முன்னாள் இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் கவாஸ்கர் பயிற்சியாளராக வர விரும்புவதாக தெரிவித்துள்ளார். கேஸ்ட்ரோல் வாழ்நாள் சாதானையாளர் விருதுக்கான தேர்தலில் கலந்து கொண்டு பேட்டியளிக்கும் போது அவர் இதனை தெரிவித்துள்ளார். சியட், கேஸ்ட்ரோல் இருவிருதுகளைப் பெற்றிருப்பினும் கிரிக்கெட்டுக் காக தமது சேவையை வழங்க விரும்புவதாகவும் பயிற்சியளித்தல் அல்லது நிர்வாக மட்டத்தில் சேவையாற்றவும் விருப்பம் தெரிவித்துள்ளார்.

# ரணிலுக்கு தலைமைப்பதவி வழங்கினால் தேசிய அரசில் இணையத் தயார்

## அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்கா

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கினால் சனாதிபதியின் தேசிய கூட்டனியில் இணையத்தயாராக இருப்பதாக சமுர்த்தியமைச்சர் எஸ். பி.திசாநாயக்கா தெரிவித்துள்ளார்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்ட இவரை விடுத்து வேறொருவருக்குத் தலைமைப் பொறுப்பையளிப்பது கேலிக்கிடமானது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

2001ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலிலும் பின்னர் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலிலும் சனாதிபதியின் கட்சிக்கு ஏற்பட்ட படுதோல்வி பற்றி தெரி வித்த அவர் மக்கள் வாக்களித்திருப்பது பிரதமர் ரணிலுக்கே என்றும் வலியுறுத்திக் கூறியுள்ளார். பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் போது மேற்படி கருத்துக்களை விவரித்ததுடன் ஒரு போதும் ஐதே முண்ணணி சனாதிபதியின் தலைமைத்துவத்தை ஏற்க மாட்டாது எனவும் கூறினார்.

# கால்களை இறுக்கக் கட்டிவிட்டு மரதன் ஓடச்சொல்வது போலுள்ளது

## - சனாதிபதியின் நடவடிக்கை குறித்து அஸ்வர்

சனாதிபதியினுடைய நடவடிக்கை எவ்வாறானதெனில் கால்கள் இரண்டையும் இறுக்கக் கட்டி விட்டு மரதன் ஓட்டப்போட்டிக்கு வா என்று சொல்வது மாதிரி இருக்கிறது இவ்வாறு அமைச்சர் அஸ்வர் தெரிவித்தார்.

பி.பி.சி.க்கு வழங்கிய செவ்வியொன்றில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தலை நடத்துங்கள் என்பது தான் எங்களுடைய கோரிக்கை ஆனால் தேர்தலை நடத்துவதற்கு சனாதிபதியோ அவர் சார்ந்த கட்சியோ அவர்களது ஏனைய தோழமைக் கட்சிகளோ உடன்பாடில்லை. ஏனென்றால் அவர்களுக்கு நம்பிக்கையில்லை.

ஆனால் எங்களைப் பொறுத்தமட்டில் அரசியல் யாப்புக்கு விரோதமாக சனாதிபதி எடுத்த நடவடிக்கைக்கு எதிராக நாங்கள் போராடவேண்டுமானால் மீண்டும் மக்கள் முன்னிலையில் தான் போகவேண்டும் இதில் எங்களுடைய கட்சியின் தலைவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் எங்களுக்கும் பூரண நம்பிக்கை இருக்கிறது. அதனை சற்று முன்பு நடைபெற்ற ஐ.தே.க. செயற்குழுக் கூட்டத்தில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தைக் கலைத்து தேர்தலை நடத்த முன்வராவிட்டால் பாராளுமன்றத்தை மக்கள் அளித்த ஆணைக்கு ஏற்ப உடன்கூட்டுங்கள் என்றே கேட்கின்றோம் என்றார்.

# அரசியல் நெருக்கடி காரணமாக சிறீல. வுக்கு வெளிநாட்டு உதவிகள் தாமதம்

## உலக வங்கிப் பணிப்பாளர் அறிவிப்பு

சிறிலங்காவில் தற்சமயம் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிகள் காரணமாக இலங் கைக்கான வெளிநாட்டு உதவிகள் கிடைப்பது தாமதமடையலாம் என உலக வங்கி அறிவிததுள்ளது.

இதனை உலகவங்கியின் பணிப்பாளர் செய்தி நிறுவனங்களிற்குக் கூறியுள்ளார். சென்ற யூன மாதத்தில் டோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் குழுக் கூட்டத்தில் வாக்களிக்கப்பட்ட நிதியுதவி சம்பந்தமாக எந்தவித பாதிப்பும் ஏற்படமாட்டாது என்று தாம் நம்புவதாகக் கூறியுள்ளார்.

அத்துடன் தற்சமயம் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்ந்து நடைபெறும் என்றும், புதிய திட்டங்கள் சம்பந்தமாக நிதியுதவி கோரப்பட்டால், உதவி வழங்கும் நாடுகள் சில காலம் காத்திருந்து நாட்டின் நிலைப்பாட்டை அவதானித்த பின்னரே நிதி வழங்கும் தீர்மானம் மேற்கொள்ளும் என்றும் கூறியுள்ளார்.

இத்தகைய அரசியல் பிரச்சினைகள் காரணமாக நாட்டின் பொருளாதாரம் பாதிப்படைவது மட்டுமல்லாது, வறுமை ஒழிப்பு நடவடிக்கைகள் முக்கியமாக சமாதான நடவடிக் கைகள் என்பனவும் பெரிதும் பாதிக்கப்படும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, சிறிலங்காவின் தற்சமய அரசியல் நெருக்கடிகள் காரணமாக கருத்துக் கூறியுள்ள சர்வதேச நாணய நிதியம் மொத்தம் 56 கோடி 70 இலட்சம் டொலர்கள் நிதியுதவியில் இரண்டாம் கட்ட நிதியுதவியான எட்டுக்கோடி டொலர்கள் உதவிக்கான அங்கீகாரத்தை வழங்குவதற்கு முன்னர், அரசாங்கத்தினது வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்படவுள்ள பிரேரணைகளை அவதானிக்க இருப்பதாகக் கூறியுள்ளது.

### தேசிய அரசு...

11.30க்கும் வெள்ளிக்கிழமை மாலை 5மணிக்கும் ஆலோசனை கோரியிருந்தார். அத்துடன் அவர்களுக்கு ஏற்ற நாள் ஒன்றை தெரிவு செய்து உறுதிப்படுத்துமாறு சனாதிபதி கேட்டிருந்தார்.

இவ் அழைப்பை நிராகரித்த ரணில் விக்கிரமசிங்க தேர்தல் ஒன்றுக்கு தாம் தயாராகிவிட்டதாகத் தெரிவித்துள்ளதாக இணையத்தளமொன்று தெரிவித்தது.(32)

### புலிகளின்...

சமாதான நடவடிக்கைகளை முழு மையான அதிகாரமுள்ள ஒருகட் சியினாலேயே முன்னெடுத்துச் செல்ல முடியும் எனவும் அதிகாரங் களை இரண்டு கட்சிகளும் பகிர்ந்து வைத்துக் கொண்டு சமாதான முயற்சிகளை முன்னெடுத்துச் செல்வது சாத்தியமற்ற விடயம் என்றும் தமது கட்சி நம்புவதாக அவர் கூறியதாகச் செய்திகள் வெளிவந்திருந்தன. பேச்சுக்கள் இடைநிறுத்தப்பட்டதான தகவலை மறுத்த பிரதமர் அலுவலகம் விடுதலைப்புலி களின் கருத்தை நோர்வேத் தரப் பூடாக அறிந்து கொண்டபின்பே இது குறித்து முடிவு செய்யப்படும் என அறிவித்துள்ளது.

### பாராளுமன்ற...

வழங்கவில்லை என்றார். ஆகையால் இக்கோரிக்கையை விடுப்பதாகத் தெரிவித்தார். அமைச்சர்களான கரு ஜயசூரிய,லொக்கு பண்டார, மகிந்த சமரசிங்க, அஸ்வர், மொமட், ஹக்கீம், ஆறுமுகன் தொண்டமான், சந்திரசேகரன் பாராளுமன்ற உறுப்பினர்கள் விநாயகமூர்த்தி சம்பந்தன் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

இன்று ஐக்கிய தேசியக் கட்சியும் அதற்கு ஆதரவான கட்சியும் இணைந்து நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்டுமாறு வேண்டுகோளை எழுத்துமூலம் சபாநாயகரிடம் சமர்ப்பிக்கவிருப்பதாகத் தெரியவருகிறது. (32)


## 45ஆம் நாள் நினைவாக...

பிறப்பு 29 □ 12 □ 1979



மறைவு 28 □ 09 □ 2003

### தியாகர் சண்முகபாலன்

(41/5 அம்பலவானர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.)

சிறுவனாய் எம்முன் வந்தவனே<br>
பெரியவனாகியபோது உன்<br>
வளர்ச்சிகண்டு மகிழ்ந்தோம்<br>
அது அற்பமாகிவிடும் என<br>
அறியவில்லையே நாம்.

பணிப்பாளர்,<br>
பணியாளர்கள்,<br>
ஈழநாதம்.


## - சனாதிபதியிடம் சமாதான நகர்வு -

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று அறிக்கை வெளியிடும்

சமாதான நகர்வின் முழுப் பொறுப்பையும் சனாதிபதியிடம் ஒப்படைப்பது தொடர்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்று அறிக்கை ஒன்றை வெளியிடவிருக்கிறது. இது தொடர்பில் நேற்று கூட்டமைப்பு கலந்தாலோசனையில் ஈடுபட்டது. இந்தக் கலந்தாலோசனை சம்பந்தமாகக் கருத்துத் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சனாதிபதியிடம் சமாதான முழுப பொறுப்பும் ஒப்படைக்கப்போவதை தாம் எதிர்ப்பதாகக் கூறினார்.

பொதுசன ஐக்கிய முன்னணியின் 7வருட ஆட்சியில் சனாதிபதி நடந்து கொண்ட விதம் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரானதாகவே இருந்தது எனவும் அவர் தெரிவித்தார். (32)

# இளவாலையில் கிணற்றிலிருந்து பெண்ணின் சடலம் மீட்பு

இளவாலைப் பகுதியில் கிணற்றில் இருந்து குடும்பப்பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

நேற்றைய தினம் மதியமளவில் பெண்ணின் சடலம் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் பொலிசாரால் ஒப்படைக்கப்பட்டது.

இளவாலை சென்னியன் வீதியைச் சேர்ந்த பார்த்திமா (வயது 45) என்பவருடைய சடலம் இது என உறவினரால் நேற்று மாலை இனம் காட்டப்பட்டது. இது தொடர்பாக தெரியவருவதாவது கடந்த 9ஆம் திகதி இரவு வீட்டில் இருந்து மர்மமான முறையில் இவர் காணாமல் போயிருந்ததாகவும் மறுநாள் மதியம் அளவில் இவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (33)

# பதிவில்லாத உந்துருளிகள் பதிவுசெய்ய நடவடிக்கை

கிளி/மாவட்டச் செயலகத்தில் பதிவில்லாத மோட்டார் சைக்கிள்கள் பதிவு 2003.11.05ம் திகதி தொடக்கம் மேற்கொள்ளப்பட்டு வரு கின்றது. இதன் பிரகாரம் 1 தொடக்கம் 325 வரை இலக் கங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதில் 2003.11.12ம் திகதி 101-200 வரையான இலக்கங்களும் 2003.11.12ம் திகதி 201-325 வரையான இலக்கங்களும் பதிவு செய்யப்படும்.

2003.11.13ம் திகதி (வியாழக்கிழமை) மீண்டும் இலக் கங்கள் வழங்கப்படவுள்ளன. என கிளி/மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

## கண்டெடுப்பு

சிறிய தங்க நகையொன்று கிளிநொச்சி மக்கள் வங்கி முன்பாக் கண்டெடுக்கப்பட்டு கிளி மக்கள் வங்கியில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரித்துடையவர்கள் வங்கிச் செயற்பாட்டு நேரங்களில் சமுகங்கொடுத்து மேற்படி பொருளினை பெற்றுச் செல்லும் வண்ணம் கிளிநொச்சிக்கிளை மக்கள் வங்கி முகாமையாளர் செ.பாலராசா வேண்டியுள்ளார். (சோ)

### சமாதானமுயற்சி...

துவது அவற்றில் தொழிற்சங்கங்கள் எவ்வாறு பங்களிக்கலாம என்பன போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன.

### இலங்கை...

இரண்டு தரப்பும் அதாவது பிரதான சிங்களக் கட்சிகள் இரண்டும் ஒன்றாக இணைந்து சுமுகமாகத் தங்களின் பிரச்சினைகளைப் பேசித் தீர்க்கவேண்டும் என்று இந்தியா கருதுகிறது என்றும் அவர் கூறினார்.

### சமாதான...

சமாதான முயற்சிகளுக்குத் துணையாக இருந்த துணை சேவைகளையும், நிறுவனங்களையும் சனாதிபதி மீண்டும் பிரதமரிடம் ஒப்படைக்க வேண்டும் எனவும் அமைச்சரவை இன்று தீர்மானம் மேற்கொண்டுள்ளது. (32)


## புதிய கணினி வகுப்புக்கள் ஆரம்பம்

முன்னர் புதுக்குடியிருப்பிலும், மல்லாவியிலும் இயங்கி வந்த **ரெக் கணினிப் பயிற்சி நிலையம்** புதிய நவீன வசதிகளுடன் வட்டக்கச்சியில் இயங்குகின்றது. இது தனது புதிய தொகுதி ஒன்றை,



15 - 11 - 2003<br>
சனிக்கிழமை<br>
காலை 9.00 மணி



**ஆரம்பிக்கின்றது.**

**கற்கை நெறி**

**MS-OFFICE**

- Introduction to Computer
- Windows
- MS-Word
- MS-Excel
- MS-Powerpoint
- MS-Access

**கட்டணம்- 2000/=**

**இடம்- ஒருங்கிணைந்த மாதிர்ப் பண்ணை வட்டக்கச்சி.**

- கற்க விரும்புவோர் நேரில் தொடர்பு கொள்ளவும்.
- உங்கள் வசதிக்கும் எங்கள் வசதிக்கும் ஏற்ப வகுப்புக்கள் தீர்மானிக்கப்படும்
- விரிவுரைகள் தமிழில் நடாத்தப்படும்.
- கற்கைநெறி முடிவில் பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்
- தவணைக் கட்டணம் 500/= மட்டுமே

**அனுமதிகள் - மட்டுப்படுத்தப்பட்டவையே.**

குறிப்பு:-

மிகவிரைவில் சிறுவர்களுக்கான வகுப்புக்கள் ஆரம்பிப்பதுடன் புதிய கற்கை நெறிகளும் ஆரம்பிக்கப்படும் என்பதனை மகிழ்சியுடன் அறியத்தருகின்றோம்.

(3862) -ரெக் கணினிப் பயிற்சி நிலையம்.


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 11ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.